# மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்

## மாவட்ட அளவிலான கருத்தரங்கம்

## "தரமான கல்வி வழங்குவதை உறுதி செய்வதில் புதிய அணுகுமுறைகள்"

**ஒருங்கிணைப்பு**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை.

**இடம்:** அன்னை மீரா பொறியியல் & தொழில்நுட்ப கல்லூரி, அரப்பாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம்

**நாள்:** பிப்ரவரி 12, 2020


**கருத்தரங்க இயக்குநர்:**
**முனைவர். இரா.அன்பழகன், முதல்வர்,**
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை, அலைபேசி எண் : 7373003442

**ஒருங்கிணைப்புச் செயலாளர்**
முனைவர் கோ. மதுசூதனா,
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இராணிப்பேட்டை, அலைபேசி எண் : 9600 836158

**மின்னஞ்சல் முகவரி:**
dietrptseminar@gmail.com


### கருத்தரங்கைப் பற்றி . . .

"கல்வியின் மதிப்பு அதிக தகவல்களை கற்றுக் கொள்வதில் மட்டுமில்லை. பாடப்புத்தகங்களிலிருந்து கற்றுக் கொள்ள முடியாதன பற்றி எண்ணுவதற்கு மனிதருக்கு பயிற்சி அளிப்பதாகும்"
– **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

கல்வியானது நீண்ட ஆழ்ந்த பொருளுடையது எனலாம். அத்தகைய கல்வியினை ஒவ்வொரு குழந்தையும் எளிதில் பெற வழிவகுப்பதும் தரமான கல்வியைப் பெற உறுதிசெய்வதும் ஆசிரியரின் தலையாய கடமையாகும். ஒவ்வொரு குழந்தையும் தன்னைப் பற்றி புரிந்து கொள்வது கல்வியின் முதன்மை நோக்கமாகும். அவ்வாறான வகையில் ஆசிரியர் தனது வகுப்பறை கற்றலை பயனுள்ள கற்றலாக்க புதுமையான முயற்சிகளை முன்னெடுப்பது காலத்தின் தேவையாகும். மேலும் ஆசிரியர்கள் நடைமுறைப்படுத்திய புதிய முயற்சிகளை தனது சகாக்களுக்குப் பரவலாக்கம் செய்வதன் மூலம் புதுமையான முறைகளைக் கற்கவும், பயன்படுத்தவும் இயலும். இத்தகைய பெரும் முயற்சியே இந்தக் கருத்தரங்கம் உருவாகக் காரணமாகும்.

### மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை பற்றி . . .

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது ஒரு பழம்பெருமை வாய்ந்த நிறுவனமாகும். இது பள்ளிக்கல்வியில் உள்ள அனைத்து நிலைகளுக்கும் வெவ்வேறு கற்றல்சார் உத்திகளையும் வளங்களையும் நிகழ்ச்சிகளையும் வழங்குவதன் மூலம் மாவட்ட அளவில் தரமான கல்வியினை உறுதி செய்யும் நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனம் ஒருங்கிணைந்த பள்ளி வளாகமாக தேசிய கல்விக் கொள்கை 1986 இன் கீழ் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் 1989 ஆம் ஆண்டு ஆண்களுக்கான அடிப்படை பயிற்சி நிறுவனமாக தொடங்கப்பட்டது. தற்போது இது இராணிப்பேட்டையிலுள்ள கெல்லீஸ் வீதியில் அமைந்துள்ளது.

அரசு மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பல்வேறு விதமான பணியிடைப் பயிற்சிகளை அளிக்கிறது. மேலும் இந்நிறுவனம் ஆசிரியர் கல்வி மற்றும் தொடக்க கல்வியில் தரமான மதிப்பீடுகள் மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

### வரவேற்கப்படும் கட்டுரைகள்

ஆய்வு / கருத்தியல் / தனியாள் ஆய்வு / பரிசோதனை சார்ந்த கட்டுரைகள் பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு நிர்வாக அலுவலர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், ஆசிரியர்கள் (முன்பருவக் கல்வி முதல் பத்தாம் வகுப்பு வரை), சிறப்புப் பயிற்றுநர்கள், அங்கன்வாடி ஆசிரியர்கள் மற்றும் முதுகலை கல்வியியல் பயிலும் மாணவர்கள் ஆகியோர் சமர்ப்பிக்கலாம்.

### உபத்தலைப்புகள்

- கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் தொழில் நுட்பம்
- மொழியில் அடிப்படைத் திறன்கள் ( கேட்டல் / பேசுதல் / படித்தல் / எழுதுதல் மற்றும் புரிந்து கொள்ளும் திறன்)
- அடிப்படை கணிதச் செயல்பாடுகள்
- நிர்வாகம் மற்றும் மேற்பார்வை
- கல்வியில் வாழ்வியல் திறன்கள்
- உள்ளடக்கிய கல்வி
- அளவீடும் மதிப்பீடும்
- வகுப்பறை மேலாண்மை உத்திகள்
- தவறாகப் புரிந்து கொள்ளுதல் மற்றும் கடினப்பகுதிகளைக் கையாளுதல்
- கற்றல் கற்பித்தல் பொருள்களின் உகந்த பயன்பாடு

### குறிப்புகள்

- ஆசிரியர்கள் கருத்தரங்க தலைப்பு மற்றும் உபத் தலைப்புகளைச் சார்ந்த கட்டுரைகளை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
- கட்டுரைகள் சொந்தமானதாக இருக்க வேண்டும்.
- கட்டுரைக்கான சுருக்கம் 250 சொற்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- தமிழில் கட்டுரை வழங்குபவர்கள், எழுத்து வகை Unicode ஆகவும்; எழுத்தளவு 14 ஆகவும்; வரி இடைவெளி 1.5 ஆகவும் அமைதல் வேண்டும்.
- மூன்று பக்க அளவிலான முழுமையான கட்டுரையில் படங்கள், அட்டவணைகள் மற்றும் மேற்கோள் நூல்கள் ஆகியவை உள்ளடங்கியிருக்க வேண்டும்.
- பதிவுபடிவம், கட்டுரைகள் மற்றும் கட்டுரைச் சுருக்கங்கள் பின்வரும் முகவரிக்கு 25.01.2020 க்குள் மென்பொருள் பிரதியாக (Soft Copy) மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மின்னஞ்சல்: dietrptseminar@gmail.com
- தேர்வாகும் கட்டுரைகள் ISBN எண்ணுடன் கட்டுரை தொகுப்பாக வெளியாகும்.